பள்ளிக் கல்வித் துறை

அனுப்புநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை –6

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்/மாவட்டக்
கல்வி அலுவலர்கள்

ந.க.எண்.74086/சி3/இ1/2019 நாள் 28.01.2019

பொருள் : பள்ளிக்கல்வித்துறை – வேலை நிறுத்தம் – ஜேக்டோ ஜியோ அமைப்பினால் 22.01.2019 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டு வருதல்– மீள பணியில் சேருதல் – சார்ந்து.

பார்வை :
1) அரசுக் கடித எண்.1684/தொ.க.3(1)/2019 நாள் 24.01.2019 மற்றும் 25.01.2019
2) சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.74086/சி3/இ1/2019 நாள் 24.01.2019
3) சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.74086/சி3/இ1/2019 நாள் 27.01.2019
4) சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.74086/சி3/இ1/2019 நாள் 28.01.2019

----

பார்வையிற்காண் அரசுக் கடிதம் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதங்களின் மீது அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

தற்போது ஜேக்டோ ஜியோ அமைப்பின் கீழ் 22.01.2019 முதல் ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்கள் தங்கள் போராட்டத்திற்கு ஆதரவாக நீதிமன்ற உத்தரவுகள் ஏதும் பெறாத நிலையிலும், பெரும்பான்மையான ஆசிரியர்கள் பணியில் சேர விருப்பம் தெரிவித்துள்ள நிலையிலும், நாளை (29.1.2019) காலை 9 மணிக்குள் துவக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் தொடர்புடைய மாவட்டக் கல்வி

Scanned by CamScanner

அலுவலர்களிடமும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலர்களிடமும் தகவலை தெரிவித்துவிட்டு (நேரிலோ/ தொலைபேசி மூலமாகவோ குறுந்தகவல் **SMS / Whats up** மூலமாகவோ) உடனடியாக தங்கள் பணியிடத்தில் சேர்ந்து பணியினை தொடரலாமென தெரிவிக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அவ்வாறு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் ஆசிரியர்கள் பணியில் சேரவில்லை எனில், அப்பணியிடங்கள் காலிப்பணியிடமாக அறிவிக்கப்பட்டு, அப்பணியிடங்களை தற்காலிக ஆசிரியர்கள் மூலமாக நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

28/1/19

பள்ளிக் கல்வி இயக்குநர்

ந.க எண். 125/அ1/2019. நாள்:- 28.01.2019.

உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து அரசு/நிதியுதவி உயர்நிலை/மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது. இதன் மீது உரிய கவனம் செலுத்தி செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்

28.1.19